நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 83/2022

## P.W.9 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சுப்ரமணியம் |
| தந்தை / கணவர் பெயர் | : | K.M. ராமன் |
| கிராமம் | : | காரிமங்கலம் |
| வட்டம் | : | காரிமங்கலம் |
| மாவட்டம் | : | தருமபுரி |
| சாட்சி வரிசை எண் | : | **PW9** |
| வயது | : | 57 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், நவம்பர் மாதம், 06–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.56 PM

1. நான் தற்போது தாரமங்கலம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 2022 ம் வருடம் மேட்டூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். 19.01.2022 ம் தேதி 15.00 மணிக்கு கொளத்தூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் நந்தகுமார் மேட்டூர் காவல் நிலையத்தில் பொறுப்பில்

இருந்தபோது கூராண்டிபுதூரை சேர்ந்த அம்மாசி மகன் முத்துராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண். 11/2022, ச.பி. 279, 304(A) இ.த.ச வின் கீழ் உதவி ஆய்வாளர் நந்தகுமார் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. முதல் தகவல் அறிக்கையின் அசலுடன் வாதியின் புகாருடன் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1 மேட்டுர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தார். நான் வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 19.01.2022 ம் தேதி 04.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் அப்புசாமி, கொளந்தான் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரிவரைபடம் தயார் செய்தேன். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. சம்பவயிடத்தில் இருந்த சாட்சிகள் சண்முகவேல், அம்மாசி இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்பு இறந்துபோன லட்சுமி என்பவரின் பிரேதம் மேட்டுர் அரசு மருத்துவமனையில் சவக்கிடங்கின் முன்பாக சாட்சிகள் முத்துராஜ், அருண், முருகேசன், பூபதி, துரைராஜ் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் 18.15 மணிக்கு ஆரம்பித்து 20.45 மணி வரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். இறந்துபோன லட்சுமியின் இறப்பின் காரணம் அறியும்பொருட்டு பிரேதத்தை காவலர் 2197 சுரேஷ் என்பவரிடம் ஒப்படைத்தேன். அவர் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக மருத்துவரிடம் ஒப்படைத்து பிரேத பரிசோதனை முடித்து அவர்களுடைய உறவினர்களிடம் முறைப்படி ஒப்படைத்தார்.**( பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4. விபத்து ஏற்படுத்திய TN 10 R 4343 இனோவா என்ற காரை ஓட்டிவந்த வழக்கின் எதிரி பூபதி, த.பெ. தனபாலன் மேட்டுர் காவல் நிலையம் முன்பு இருந்தவரை காலை 09.00 மணிக்கு கைதுக்கான காரணம் கூறி கைதுசெய்தும் நிலையம் அழைத்துவந்து தக்க பிணையில் விடுவித்தேன். பின்னிட்டு 26.01.2022 ம் தேதி இந்த வழக்கில் விபத்தை ஏற்படுத்திய வாகனம்TN 10 R 4343 இனோவா என்ற

காரை தக்க வேண்டுகோள் அறிக்கையுடன் மோட்டார் வாகன ஆய்வுக்கு மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. 27.01.2022 ம் தேதி இந்த விபத்து ஏற்படுத்திய எதிரிக்கு ஓட்டுநர் உரிமம் ரத்துசெய்ய கோரி வேண்டுகோள் கடிதம் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன்.

5. பின்னிட்டு 14.03.2022 ம் தேதி இந்த வழக்கின் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஆய்வுசெய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. தங்கராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். **( TN 10 R 4343 இனோவா என்ற காரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

6. அன்றே இந்த வழக்கில் இறந்துபோன லட்சுமி என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்த மேட்டூர் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. சுரேந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். **(பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

7. அன்றே இந்த வழக்கில் இறந்துபோன லட்சுமி என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவரிடம் பிரேதத்தை அடையாளம் காட்டி ஆஜர் செய்த காவலர் 2197 சுரேஷ் என்பவரையும் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்து அதன் நகலை மேல்விசாரணைக்காக என் பார்வைக்கு வைத்து உதவி ஆய்வாளர் திரு. நந்தகுமார் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். இத்துடன் இந்த வழக்கில் எனது புலன் விசாரணையை முடித்து இந்த விபத்து வழக்கில் விபத்து ஏற்படுத்திய எதிரி பூபதி என்பவரின் மீது ச.பி. 279, 304(A) இ.த.ச வின் கீழ் இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. காவல் உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை தயார் செய்து 19.01.2022 ம் தேதி மாலை 16.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை நகலை என்னிடம்

ஒப்படைத்தார். விபத்து நடந்த இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 16.30 மணிக்கு சம்பவயிடம் சென்றேன். என்னுடன் யார்யார் வந்தார்கள் என்றால் தட்டச்சு செய்யும் காவலர் வந்தார். பார்வை மகசர் 16.30 மணிக்கு தயார் செய்தேன். பார்வை மகசரை என்னுடன் அழைத்து சென்ற காவலரை வைத்து தயார் செய்தேன்.

2. என்னுடன் வந்த காவலரை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை. பார்வை மகசர் சாட்சி அப்புசாமி, கொளந்தான் என்றால் சரிதான். பார்வை மகசர் சாட்சி கொளந்தான் என்பவர் கௌந்தன் என்றுதான் பார்வை மகசரில் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். நீதிமன்ற வாக்குமூலத்தில் தனது பெயரை சரியாக எழுதி கொளந்தான் என்று கையொப்பம் செய்துள்ளார் என்றால் நான் விசாரித்தபோது என்னிடம் அவ்வாறுதான் கையெழுத்து செய்தார்.

3. இரண்டு கையெழுத்தும் வேறுவேறு மாதிரி உள்ளதென்றாலும் பார்வை மகசரில் போடப்பட்ட கையொப்பம் அ.சா.5 கொளந்தான் உடையது அல்ல என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகசரை தயார் செய்துக்கொண்டு கொளந்தான் கையெழுத்தை நாங்களே போட்டுக்கொண்டோம் என்றாலும் சரியல்ல.

4. மாதிரி வரைபடத்தை நான்தான் என்னுடன் அழைத்துசென்ற காவலரை வைத்து தயார் செய்தேன். விபத்து நடந்ததாக சொல்லப்படும் சாலை மாநில நெடுஞ்சாலை என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் அ.சா.1 முத்துராஜ் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்குமென்றால் சுமார் 150 அடி தூரம் இருக்கும். அ.சா.1 முத்துராஜ் அவருடைய வாக்குமூலத்தில் வீட்டின் முன்புறம் ரோட்டில் நின்றுக்கொண்டிருந்தோம் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

5. அ.சா.1 முத்துராஜ் தனது வீட்டிற்கும் சம்பவம் இடத்திற்கும் 200 மீட்டர் இடைவெளி இருக்கும் என்று எனது விசாரணையில் சொல்லவில்லை. அ.சா.2 அருண் எனது விசாரணையில் அவருடைய விவசாய நிலத்தில் வேலை செய்துக்கொண்டிருந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.2 அருண் நீதிமன்ற சாட்சியத்தில் 2 நிமிடம் கழித்து சத்தம்கேட்டுதான் சம்பவயிடத்திற்கு

போனதாகவும் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் சொல்லியிருந்தால் சரிதான். அ.சா.3 பூபதி நீதிமன்ற சாட்சியத்தில் 5 நிமிடம் கழித்து சத்தம்கேட்டுதான் சம்பவயிடத்திற்கு போனதாகவும் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று சொல்லியிருந்தால் சரியல்ல.

6. அ.சா.1 முத்துராஜ் என்பவர் தான் புகார் கொடுத்தார். அ.சா.2 அருண் கொடுத்ததாக சொல்லியிருந்தால் அது தவறு. அ.சா.6 சண்முக வேல் இந்த வழக்கில் எதிரி ஓட்டிவந்த வாகனத்தின் பதிவெண் தனக்கு தெரியாது என்றும், அதனை யார் ஓட்டிவந்தார்கள் என்று தனக்கு தெரியாது என்றும் சொல்லியிருந்தால் அது தவறு. அவரை சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாவார்.

7. அ.சா.7 முருகேசன் விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும் சம்பவயிடத்திற்கு 20 நிமிடம் கழித்து வந்து தனது அம்மா கீழே கிடந்ததை பார்த்ததாக சொல்லியிருந்தால் அது தவறு. அ.சா. 8 துரைராஜ் என்பவரை காவல் நிலையத்தில் ஒருமுறையும், மருத்துவமனையில் வைத்து ஒருமுறை விசாரணை செய்தேன். அ.சா.1 முத்துராஜ் புகார் அளிக்கும் அ,சா.8 துரைராஜும் அவருடன் இருந்தார்.

8. அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் இறந்துபோன லட்சுமி என்பவரின் உறவினர்கள் என்றால் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் அவரது உறவினர்கள். மற்ற நபர்கள் அவரது ஊரைச்சார்ந்தவர்கள் ஆவார். இந்த வழக்கில் எதிரி ஓட்டிவந்த இனோவா கார் பவானியிலிருந்து மேட்டுர் நோக்கி அதற்கான இடதுப்புறத்தில் சரியாகதான் வந்துக்கொண்டிருந்தது என்றாலும் இந்த வழக்கில் இறந்துபோன பெண் மாட்டுடன் கார் வருவதை கவனிக்காமல் திடீரென குறுக்கே வந்ததால்தான் இந்த விபத்து ஏற்ப்பட்டது என்றாலும் சரியல்ல.

9. நான் தயார் செய்த மாதிரி வரைபடத்தில் தென்வடல் ரோட்டில் மேற்குபுறமாகத்தான் சம்பவம் நடைபெற்ற பகுதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாலையின் மத்தியில் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இறந்துபோன பெண்மணி சுமார் 80 வயது மதிக்கதக்க நபர் என்றாலும் அவர் வயதின் காரணமாக சாலையை கவனிக்காமல் திடீரென சாலையை கடந்ததால்தான் இந்த விபத்து நடைபெற்றது என்றாலும் சரியல்ல.

10. நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. இறந்துபோன பெண் மாட்டை பிடித்து செல்லும்போது சாலையை கவனிக்காமல் கடந்து மீண்டும் மாடு இழுத்து பின்னோக்கி வந்ததால்தான் காரில் மோதி இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மாட்டை பிடிப்பதற்காகத்தான் அந்த பெண் ரோட்டை கடந்தார்.

11. அ.சா.8 துரைராஜ் என்பவர் வழக்கறிஞர் என்பதாலும் மேலும் அ.சா.1 ற்கு வழக்கறிஞர் உறவினர்கள் இருப்பதாலும் அவர்களுக்கு ஆதரவாகவும், சம்பவம் நடந்த விதத்தை மாற்றி எதிரிக்கு எதிராக தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-04.50 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா. கோபாலகிருஷ்ணன்**

**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**